**செய்தி வெளியீடு எண்: 856** **நாள்:11.11.2020**

**<u>இன்று (11.11.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்தும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அறிவித்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கம்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று உலகளவில் பரவி, அனைத்து நாடுகளிலும் அதனை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவிலும், குறிப்பாக தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டவுடன், அதைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டன. உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ நிபுணர்கள் குழு வழங்குகின்ற ஆலோசனைகளின் அடிப்படையில் அரசு இயந்திரங்கள் முடுக்கிவிடப்பட்டு, இந்நோய்த் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் முழு மூச்சுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதனால் தமிழகத்தில் நோய்த் தொற்றுப் பரவல் குறையத் தொடங்கி, கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கின்றோம்.

கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களிலும், டெல்லியிலும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் அதிகமாக காணப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் குறைந்ததற்கு காரணம், அரசு தீவிரமாகக் கண்காணித்து அரசு துறைச் செயலாளர்கள், உயரதிகாரிகள் சரியான முறையில் அரசின் ஆலோசனைகளைப் பின்பற்றி, மாவட்ட நிர்வாகமும் சிறப்பான முறையில் செயல்பட்ட காரணத்தினால் தமிழகத்தில் இந்நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது.

இந்நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக அரசு பல வழிமுறைகளை மாவட்ட நிர்வாகத்திற்கும், சுகாதாரத்துறைக்கும் அவ்வப்போது வழங்கி வருகிறது. அந்த வகையில், நகர பகுதிகளிலும், மக்கள் அதிகமாக வசிக்கும் குடியிருப்பு பகுதியிலும் தொடர்ந்து கிருமி நாசினிகள் தெளித்து வருகின்றோம். நோய்த் தொற்று பரவல் உள்ள வீதிகளையும், ஊர்களையும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவித்து, அதில் தனி கவனம் செலுத்தப்பட்டது. அதோடு நோய்த் தொற்று பரவலை தடுப்பதற்கு அனைத்து மாவட்டங்களிலும்

காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் மக்களை அதிகளவில் பங்கு பெறச் செய்து, நோய்த் தொற்று அறிகுறிகள் தென்பட்டால் பரிசோதனைகள் மேற்கொண்டு, உடனடியாக மருத்துவமனையில் சேர்த்து உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்கின்றோம்.

இன்றையதினம் விருதுநகர் மாவட்டத்தை பொறுத்தவரை நாள்தோறும் 103 காய்ச்சல் முகாம்கள் வீதம், இதுவரை 10,173 முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 4,55,865 நபர்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளார்கள். இந்த மாவட்டத்தில் 24 கட்டுப்படுத்தப்பட்டப் பகுதிகள் உள்ளன. அதோடு, நடமாடும் மருத்துவக் குழுக்களும், அரசால் நியமிக்கப்பட்ட சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை பணியாளர்கள் வீடு, வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, பரிசோதனைகள் செய்து, அறிகுறிகள் தென்பட்டவர்களை மருத்துவமனைகளில் சேர்த்து, சிகிச்சை அளித்து, குணமடையச் செய்கின்றார்கள். இவ்வாறு பல்வேறு வகைகளில் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தமிழகத்தில் இந்நோய் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நோய்ப் பரவல் இருக்கின்ற பகுதிகள் குறித்து மாவட்ட நிர்வாகம் அல்லது சுகாதாரத் துறையிடம் தெரிவித்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு சென்று அந்தப் பகுதி மக்களுக்கு பரிசோதனை செய்து, நோய் அறிகுறிகள் தென்பட்டவர்களை குணமடையச் செய்வதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இவ்வாறு பல வழிகளிலும் நோய் பரவலைத் தடுப்பதற்கு எடுத்த முயற்சி நல்ல பலனைக் கொடுத்துள்ளது.

மேலும், முழுக்க, முழுக்க RT-PCR பரிசோதனைக்கு உட்படுத்திய காரணத்தினால்தான் நோய்த் தொற்று துல்லியமாக கண்டுபிடிக்கப்பட்டு, உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் Rapid பரிசோதனை செய்ததால் துல்லியமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. தமிழகத்தில் நாளொன்றுக்கு சுமார் 75 ஆயிரம் நபர்களுக்கு RT-PCR பரிசோதனைகள் செய்து கொண்டிருக்கின்றோம். அதேபோல, Contact Tracing என்று சொல்லக்கூடிய, நோய்த் தொற்று ஏற்பட்டவர் எந்தெந்தப் பகுதிகளுக்கு சென்று வந்தார் என்பதையெல்லாம் நன்கு விசாரித்து அந்த பகுதிகளுக்குச் சென்று அந்தப் பகுதிகளிலுள்ள மக்களை பரிசோதனைக்கு உட்படுத்தி, அதில், நோய் அறிகுறிகள் தென்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்கின்றோம். இவ்வாறு தொடர்ந்து செயல்பட்ட காரணத்தினால்தான் தமிழகத்தில், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நோய் தொற்றுப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்குத் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தேவையான படுக்கை வசதிகள் செய்துள்ளோம். ஆக்சிஜனுடன் கூடிய படுக்கை வசதிகளும் செய்துள்ளோம். அதோடு, தேவையான மருத்துவ உபகரணங்கள் போதிய அளவில் கையிருப்பில் இருக்கின்றன. N-95 முகக்கவசம், PPE Kits, Zinc and Multi-Vitamin மாத்திரைகள் போதிய அளவிற்கு கையிருப்பில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், கபசுரக் குடிநீர் மக்களுக்கு வழங்கிய காரணத்தால் அதுவும் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு ஒரு சிறந்த மருந்தாக அமைந்துள்ளது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இவ்வாறு பல வழிகளிலும் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க விருதுநகர் மாவட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக, படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம்.

விருதுநகர் மாவட்டத்தில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. விருதுநகர் மாவட்ட மக்கள், மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு விருதுநகர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை தொடங்கிட அறிவிப்பு வெளியிடப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம் தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டம் ஆகும். மகப்பேறு காலங்களில் பெண்களுக்கு உரிய மருத்துவ வசதி கிடைத்திட வேண்டுமென்ற அடிப்படையில் அரசுத் தலைமை மருத்துவமனை வளாகத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடப் பணி ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. செவிலியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டும் பணி முடிவடைந்திருக்கிறது.

வருவாய் துறையை பொறுத்தவரை முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்கள் அரசை தேடிச் சென்று மனுக்களை கொடுத்து தீர்வு காண்பதற்கு பதிலாக, அரசே மக்களைத் தேடிச் சென்று அவர்களிடத்தில் மனுக்களை பெற்று குறைகளைத் தீர்ப்பதுதான் முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் நோக்கமாகும். அந்த அடிப்படையில், விருதுநகர் மாவட்டத்தில் பெறப்பட்ட 8,251 மனுக்களில், தகுதி வாய்ந்த 4,131 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 2019–20ஆம் நிதியாண்டில், விருதுநகர் மாவட்டத்தில் வீட்டுமனை வேண்டி பெறப்பட்ட விண்ணப்பத்தில் தகுதியான 5,762 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு உழைக்கும் திறனற்ற வயது முதிர்ந்தவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1,000 முதியோர் ஓய்வூதியத் தொகை தமிழ்நாடு முழுவதும் சுமார் 5 லட்சம் நபர்களுக்கு வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். அதன் வாயிலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோர்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களை பரிசீலித்து தகுதியானவர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டதன் அடிப்படையில், விருதுநகர் மாவட்டத்தில் பெறப்பட்ட 3,802 மனுக்களில் தகுதியான 1,178 மனுக்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்த 2,794 மனுக்களில், தகுதியான 1,705 மனுக்களுக்கு பட்டா மாறுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையில் குடிமராமத்துப் திட்டம் என்ற ஒரு அற்புதமான திட்டத்தை மாண்புமிகு அம்மாவுடைய அரசு அறிவித்து, எல்லா மாவட்டத்திலும் நடைமுறைபடுத்தி வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் பல ஆண்டு காலமாக தூர் வாரப்படாத ஏரிகள் பொதுப்பணித் துறையின் மூலம் தூர் வாரப்பட்டன. 2019–2020 வரை 64.69 கோடி செலவில் 146 குடிமராமத்து பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு இருக்கின்றன. 2020–2021 ஆம் ஆண்டில் இந்த திட்டத்திற்காக இந்த மாவட்டத்தில் 17.61 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 40 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல பொதுப்பணித் துறையின் மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். பழுதுபார்த்தல் சீரமைத்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ், 16 கண்மாய்களை 11.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

காரியப்பட்டி வட்டம், குண்டாற்றின் குறுக்கே ரூபாய் 10.10 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து பந்தநேந்தல் ஏரிக்கு நீர் வழங்கும் பணிகள் துவங்கப்படவுள்ளது. வத்திராயிருப்பு வட்டம், வடுகப்பட்டி கிராமம், அர்ஜுனா நதியின் குறுக்கே ரூபாய் 2.59 கோடி மதிப்பீட்டில் தடுப்பணைக் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது. வெம்பக்கோட்டை வட்டம், அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் தேவியாற்றின் குறுக்கே ரூபாய் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி பரிசீலனையில் உள்ளது. சாத்தூர் வட்டம், பவநாயக்கன்பட்டி கிராமத்தில், நல்லி உப்போடையின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. வெம்பகோட்டை வட்டம்,

சங்கரபாண்டியபுரம் கிராமத்தில், பல்லம்பட்டி ஓடையின் குறுக்கே 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

விருதுநகர் வட்டம், பாவாலி கிராமத்தில் கௌசிகா நதியின் குறுக்கே 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி ஆய்வில் உள்ளது. விருதுநகர் வட்டம், வனமலைக்குறிச்சி கிராமத்தில், கௌசிகா நதியின் குறுக்கே 2.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி ஆய்வில் உள்ளது.

பொதுப்பணித் துறையின் சார்பாக பல்வேறு கட்டடப் பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இராஜபாளையம்–வெம்பக்கோட்டைச் சாலை, இராஜபாளையம் ரயில்வே நிலையத்திற்கு அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 46 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. தேசிய நெடுஞ்சாலை–208ல், இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரங்களுக்கு ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்படும். இராஜபாளையம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து இராஜபாளையம் அரசு மருத்துவமனை வரை இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

சிவகாசி நகருக்கு வெளிப்புறவட்ட சுற்றுச்சாலை அமைக்கும் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூபாய் 82.45 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது. அருப்புக்கோட்டை நகருக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. ரூபாய் 35.40 கோடி மதிப்பீட்டில் நிலஎடுப்பு பணிகள் மேற்கொள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது.

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 2,573 வீடுகள் ரூபாய் 46.31 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 2,294 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. 273 வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 5,947 வீடுகள் ரூபாய் 101 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 2,806 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ், 99 ஊராட்சிகளிலுள்ள 234 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக ரூபாய் 50.80

கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அது நிறைவு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 30,051 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 4,20,701 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கு ரூபாய் 1,263 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தில், இதுவரை 2,790 நபர்களுக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு அவற்றுள் 2,070 நபர்களுக்கு ரூபாய் 5.18 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பல திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பாதாளச் சாக்கடைத் திட்டத்தை பொறுத்தவரை விருதுநகர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம், சாத்தூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம், ராஜபாளையம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும் பல திட்டங்கள் இன்றைக்கு மாண்புமிகு அம்மாவின் அரசின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வேளாண்மைத் துறையிலே பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. 2016–2017–ல் கடுமையான வறட்சி ஏற்பட்டபோது 69,258 விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் கீழ், இடுபொருள் நிவாரண உதவியாக சுமார் ரூபாய் 55 கோடி வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 335.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் விருதுநகர் மாவட்டத்திற்குட்பட்ட விருதுநகர், அருப்புக்கோட்டை, சிவகாசி, திருத்தங்கல், சாத்தூர், இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிகளில் பாரதப் பிரதமரின் அனைவருக்கும் வீடு வசதித் திட்டத்தின் கீழ், பயனாளிகள் தாமாக முன்வந்து கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்தில் மொத்தம் 3,875 வீடுகள் கட்ட ரூபாய் 114.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது. பாரதப் பிரதமரின் அனைவருக்கும் வீடு வசதித் திட்டத்தின் கீழ், பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், இராஜபாளையம் நகராட்சியில் உள்ள சமந்தாபுரம் பகுதியில் ரூபாய் 77.39 கோடி மதிப்பீட்டில் 864 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பள்ளிக் கல்வித் துறையில் இம்மாவட்டத்தில் 6 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிப்புத்தூரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த மாவட்டத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**